# யார் இந்த இயேசு?

என்னில் பாவம் உண்டென்று உங்களில் யாரால் சொல்ல முடியும்? என்று கேட்டார்! அவருக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டு என்கிறார்! மனிதரின் பாவங்களை இயேசு மன்னிக்கிறார்!

அவரும் கடவுளும் ஒன்று என்கிறார்! தாம் கடவுளுடைய குமாரன் என்கிறார்! அவரிடத்தில் வருபவர்களுக்கு மறு ஜென்ம வாழ்வு கிடைக்கும் என்கிறார்! அவர் மட்டுமே வழி என்கிறார்! வேறு வழிகள் இல்லை என்கிறார்!

# இயேசு கடவுளா?

**இயற்கை அவருக்கு கீழ்ப்படிந்தது!** காற்றையும் கடலையும் அடங்கு என்று அதட்டினார்! அவை அடங்கினது!

**மரணத்தை மேற்கொண்டார்.!** மரித்தவர்களை உயிரோடு எழுப்பினார்! அவரும் அவர் சொல்லிய பிரகாரமாகவே உயிரோடு எழுந்தார்!

**வியாதிகளை சுகமாக்கினார்!** அவரிடத்தில் வியாதிகளோடு வந்தவர்களெல்லாரையும் குணமாக்கினார்! குருடர்கள் பார்வையடைந்தனர்! சப்பாணிகள் நடந்தார்கள்! குஷ்டரோகிகள் சுகமானார்கள்!

**பிசாசுகளின் விரட்டினார்!** பேய் பிசாசு பிடித்த மக்களுக்கு பிசாசுகளிடமிருந்து விடுதலை கொடுத்தார். பிசாசுகள் அவரைக்கண்டு பயந்தன.

# எதற்காக மனித அவதாரம்?

கடவுள் **மனிதனை** படைத்தார். மனிதன் பிசாசின் சொல்லை கேட்டு **பாவம்** செய்தான். மனிதனின் பாவத்தின் நிமித்தம் உலகத்தில் **மரணம்** வந்தது. மரணத்தினின்று மனிதனை காப்பாற்றி, நித்திய ஜீவனை அளிக்கவே கடவுள் மனித அவதாரம் எடுத்து இயேசுவாக பிறந்தார்.

# இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும்.

இயேசு பாவம் செய்யாமல் வாழ்ந்து மனுக்குலத்தின் பாவங்களுக்காக மரணம் எனும் தண்டனையை ஏற்றுக்கொண்டார். மரணத்தை வென்றார். உயிர்த்தெழுந்து தாம் கடவுள் என்பாதை நிரூபித்தார்.

# ஆண்டவராகிய இயேசு மீண்டும் வருவார்.

மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். மத்தேயு 24: 27

ஏதாவது கேள்விகள் இருப்பின் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.